[1981 மே 7

திரு. உ. சுப்பிரமணியன் : கோவில்களில் திரைப்படங்கள் எடுக்கும்போது மூலஸ்தானத்தில் படம் எடுக்க அனுமதிக்கப் படுகிறதா? அப்படி அந்த 'ஸாங்கடம் ஸாங்க்டோரம்' என்று சொல்லக்கூடிய அந்த வழிபாடு செய்கிற ஸ்தலத்தின் புனிதத் தன்மை குறையாமல் இருக்க அது தடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : ஆலயங்களில் திரைப் படங்கள் எடுக்கிறபோது சில கண்டிப்பான நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

கோவில் உட்பிரகாரத்திலோ அல்லது கர்ப்பகிரகத்திற்குள் இருக்குமிடம், மூலவர் மற்றும் உத்ஸவர் விக்ரகங்களை பட மெடுத்தல் கூடாது.

கோவிலில் உட்பிரகாரத்திற்குள் நடைபெறும் சடங்குகள், மடாதிபதிகள் தியானங்கள் மற்றும் வழிபாடுகள் இவற்றினை யும் படம் பிடித்தல் கூடாது.

கோவில்களில் தெய்வீக வழிபாடு மற்றும் கோட்பாடுகள் இவற்றிற்குத் தகுந்த மரியாதை கொடுக்கப்பட வேண்டும். இந்துக்கள் அல்லாதவர்கள் கோவில் உட்பிரகாரத்திற்குள் பிர வேசிக்கக் கூடாது என்ற கண்டிப்பான நிபந்தனைகள் மீதுதான் அனுமதி அளிக்கப்படுகிறது.

தர்மபுரி நகரிலுள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணி

*வினா எண் 1009—திரு. எஸ். அரங்கநாதன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தர்மபுரி நகரில் குமாரசுவாமிப் பேட்டையில் உள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோயில் திருப்பணி செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ) மற்றும் (ஆ) தர்மபுரி நகரில் குமாரசுவாமி பேட்டையில் உள்ள அருள்மிகு சிவசுப்பிரமணியசுவாமி ஆலயத்தின் இராஜ கோபுரம், பின்கோபுரம் ஆகியவைகளை ஆலய நிதியினைக் கொண்டு திருப்பணி செய்ய ரூ. 45,000-க்கு இந்து சமய அற நிலையத்துறை ஆணையரின் 1980 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3 ஆம் நாளிட்ட குறிப்பில் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு அதே தொகைக்கு மதிப்பீடு 1981 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 20 ஆம் நாளைய குறிப்பில் அங்கீகரிக்கப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

1981 மே 7]

டாக்டர் கே. சமரசம் : தர்மபுரி நகரில் குமாரசுவாமிப் பேட்டையில் உள்ள சிவசுப்பிரமணியசுவாமி கோவில் திருப்பணிக்காக ரூ. 45,000 ஒதுக்கியும், அதற்கு வேண்டிய செயல் திட்டங்களை உருவாக்கியும் தந்ததற்காக இந்த அரசைப் பாராட்டுகிறேன். அதேபோல் தர்மபுரி மாவட்டத்திலுள்ள இந்த சிவசுப்பிரமணியசுவாமி கோவில் மிகவும் புகழ்பெற்ற கோவிலாக இருப்பதால் என்னென்ன வகையில் இதை அபிவிருத்தி செய்யவும் அல்லது வெளியே இருந்து வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளை அல்லது பக்தர்களை ஈர்த்து அவர்கள் கண்டுகளிக்கக்கூடிய வகையில் என்னென்ன முயற்சிகளை அரசு மேற்கொள்ளயிருக்கிறது ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : திருப்பணி பற்றிய கேள்வி இது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு தகவல்களைத் தெரிந்து கொள்ள விரும்பினால் தனிக் கேள்வி போடுமாறு வேண்டுகிறேன்.

திருமங்கலம் தொகுதியில் கிழவனேரி—நெடுங்குளம் ஆகிய ஊர்களை இணைக்கும் ஆற்றின் குறுக்கே பாலம்

*வினா எண் 776—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருமங்கலம் தொகுதியில் உள்ள கிழவனேரி, நெடுங்குளம் ஆகிய ஊர்களுக்குச் செல்வதற்கு ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(முற்பகல் 9-10)

திரு. என் எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒருமொத்தமாக வினாவிற்கு இடமில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. கிழவனேரி, நெடுங்குளம் ஆகிய ஊர்கள் திருமங்கலம் தொகுதியில் இருக்கின்றன. மழைக் காலங்களில் விவசாயப் பெருமக்கள், பெண்டிர் நோயாளிகள், கர்ப்பிணிகள் ஆகியோர் மருத்துவ வசதி பெறுவதற்கு இயலாமல் இருக்கின்ற காரணத்தினாலே, அரசு இதற்கு

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS